Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror


www.tamilmirror.lk

MONDAY, JANUARY 9, 2023

திங்கட்கிழமை ஜனவரி 09, 2023 | ஒளி: 08 கதிர்: 182 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

கொரோனா பரவினால் இலங்கையால்

# தாங்க முடியாது



**வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை**

கொரோனா வைரஸ் மீண்டும் பரவத் தொடங்கினால், தற்போது பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இலங்கையால், அதன் தாக்கத்தை தாங்க முடியாது என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவிலும் ஏனைய சில நாடுகளிலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதை கருத்தில் கொண்டு இலங்கைக்கு வருகைதருவோர் குறித்து, கவனம் செலுத்துமாறும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதற்கு கொரோனா தொழில்நுட்பக் குழு ஒன்று கூட வேண்டும் என்று சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சாமில் விஜேசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, கொரோனாவின் புதிய மாறுபாடு எதுவும் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட வில்லை என்றும் கொரோனா அறிகுறிகள் மாறவில்லை என்றும் ஐடிஎச் வைத்தியசாலையின் வைத்திய ஆலோசகர் டொக்டர் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக்காட்டினார்.

எனினும், சாத்தியமான நோய்த் தொற்றைத் தடுக்க உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று வைத்தியர் குறிப்பிட்டார்.

## இன்று முதல் தீவிர பேச்சு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் இன்று (09) முதல் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட உள்ளன.

நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தைக்கு வருமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல கட்சிகளுக்கும் பாராளுமன்றத்தில் வைத்து பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்.

அதன்பின்னர், இரண்டொரு தடவைகள் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்தப் பேச்சு வார்த்தைகளை துரிதப்படுத்தும் வகையில், இன்று (09) முதல், முழு வீச்சில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

தொடர்ச்சி P2

## மின்கட்டண திருத்தம்: இறுதி தீர்மானம் இன்று



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று (09) நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் மின்சாரக் கட்டணத்தை திருத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளது.

கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட மின் கட்டண திருத்த யோசனை தொடர்பில் அமைச்சர்களின் கருத்துகளைப் பெறும் நோக்கில் ஒரு வாரம் கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில், யோசனைக்கு அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைக்கும் என்று நம்புவதாக வலுச்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

சின்னத் தேர்தலில்

## மூன்று விதமாக மு.கா போட்டி



எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸ் தனித்தும், ஐக்கிய மக்கள் சக்தியுடனும், வேறு கட்சிகளுடனும் மூன்று விதமாகப் போட்டியிடவுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸின் ஊடாகப் போட்டியிடு வதற்கு தற்போதைய உறுப்பினர்களுக்கு மேலதிகமாக இளைஞர்கள், பெண்கள் ஆகியோரை உட்படுத்த, கட்சி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தொடர்ச்சி P2



## பஸ்களை கையளித்தது இந்தியா


'இலங்கையின் அசைவியக்கத்துக்கும் வாய்ப்புகளுக்கும் ஆதரவளித்தல்' எனும் கருப்பொருளின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபையின் பாவனைக்காக 75 பஸ்கள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கையளித்தார்.

இலங்கையின் பொதுப் போக்குவரத்து உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய உதவியின் கீழ் 500 பஸ்கள் இலங்கைக்கு விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்

## டெலிபோனுக்கே அமோக வெற்றி

■ ரஞ்சித் ராஜபக்ஷ



தமிழ் முற்போக்கு கூட்டணி, டெலிபோனை சின்னமாகக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடும் என தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி அமோகமாக வெற்றியீட்டும் என்றார். ஹட்டனில் நேற்று (08) நடைபெற்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 'பேட் மேன்' என்றவர்கள் 'பஸ் மேன்' என்கின்றனர்

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெண்களின் ஆரோக்கியம் குறித்து பேசிய போது 'பேட் மேன்' என்று அழைத்தனர், தற்போது பஸ்களை அன்பளிப்புச் செய்யும் போது முகநூலில் 'பஸ் மேன்' என்று என்னை அழைக்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இவ்வாறு என்னை அவமானப்படுத்துபவர்கள் சொகுசு பஸ்களை வாங்கி, தங்கள் விருப்ப இலக்கங்கள், கட்சிச் சின்னங்கள் போன்றவற்றை ஸ்டிக்கர்களாக ஒட்டிக்கொண்டு நாடு முழுவதும் சென்று வாக்கு கேட்டு வருகின்றனர் என்றார்.

தொடர்ச்சி P2

## போலி தலதா மாளிகை மண்டபம் இடித்தழிப்பு



குருநாகல், பொத்துஹெரவில் நிர்மாணிக்கப்பட்ட போலி தலதா மாளிகையின் எண் கோண மண்டபத்தை இடித்து அழிக்கும் பணிகள், ஞாயிற்றுக்கிழமை (08) காலை முதல் ஆரம்பிக்கப்பட்டன. குறித்த போலி தலதா மாளிகை தொடர்பாக பௌத்த உயர்பீடம் மற்றும் தலதா மாளிகையின் தியவதன நிலமே ஒப்பமிட்ட கடிதம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு முறைப்பாடு செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## சமூக ஊடகங்களுக்கு சிங்கப்பூர் சட்டம் வருகிறது



அரசியலமைப்பின் பிரகாரம் மத வணக்கஸ்தலங்களை நிந்திக்கக் கூடாது என எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பத்திரிகைகளுக்கும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எனினும், சமூக ஊடகங்கள் எல்லைமீறி செயற்படுகின்றன. ஆகையால் அவற்றுக்கு சிங்கப்பூர் சட்டம் கொண்டுவரப்படும் என்றார். கொழும்பிலுள்ள தனது உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் ஜனவரி 6 ஆம் திகதியன்று பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்தார்.

தொடர்ச்சி P2

## புலமைப்பரிசில் முடிவுகள் விரைவில் வெளியாகும்

டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணியின் 99 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்துள்ள பரீட்சைகள் திணைக்களம், இறுதி மதிப்பீடுகளுக்கு பின்னர் பரீட்சை முடிவுகள் கணினி மயப்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

நுரைச்சோலையில்

## மீண்டும் இயங்குகிறது 1ஆவது மின்பிறப்பாக்கி


கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி செயலிழந்த நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி அனல்மின் நிலையத்தின் 1ஆவது மின்பிறப்பாக்கி அலகு சனிக்கிழமை (07) முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. பராமரிப்புப் பணிகளுக்காக செயலிழக்கச் செய்யப்பட்ட முதலாவது மின்பிறப்பாக்கி அலகு, மீண்டும் இயக்கப்படுவதாகவும் எதிர்வரும் 02 நாள்களுக்குள் குறித்த மின்பிறப்பாக்கி தேசிய அமைப்புடன் இணைத்துக் கொள்ளப்படும் எனவும் சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## 'பாதுகாப்பு வீட்டில்' இருந்த பெண்கள் நாடு திரும்பினர்

■ டி.கே.பி.கபில்




ஓமான், மஸ்கட் நகரில் இலங்கை தூதுவராலயத்தால் இணைந்ததாக நிர்வகிக்கப்பட்ட 'பாதுகாப்பு வீட்டில்' தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கை பணிப்பெண்கள் எழுவர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை ஞாயிற்றுக்கிழமை (08) அதிகாலை, வந்தடைந்தனர்.

அந்தப் பாதுகாப்பு வீட்டில் 118 பெண்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## இலங்கையர்கள் 38 பேரும் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் 38 பேரின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. அவர்களின் கடவுச்சீட்டுகள் சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் உண்ணாவிரதப் போராட்டம், சனிக்கிழமை (07) கைவிடப்பட்டது.

தொடர்ச்சி P2

இலங்கை – தாய்லாந்து ஒப்பந்தம்

## 9, 10ஆம் திகதிகளில் 3 ஆவது சுற்றுப் பேச்சு



இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை இன்றும் (09) நாளையும் (10) கொழும்பில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

**PAGE 1 தொடர்ச்சிகள்**

# மூன்று விதமாக....

அவை செயலாளருக்கும், தேசிய அமைப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தின் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்றது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் விதம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதில் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கும் கலந்து கொண்டார்.

இதன்போது அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதையே பெரும்பாலானோர் வலியுறுத்தினர்.

போட்டியிடும் உள்ளூராட்சி மன்றங்கள் அவற்றில் கட்சிக்கு வழங்கப்படும் வட்டார மற்றும் ஆசன ஒதுக்கீடுகள் என்பவற்றைப் பொறுத்தான ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவத்துடனான பேச்சுவார்த்தையின் பின்னர், இதுபற்றிய இறுதித் தீர்மானம் விரைவில் மேற்கொள்ளப்படுமென தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறிருக்க, பிரஸ்தாப தேர்தல் தொடர்பில் கொழும்பு மாநகர சபை உட்பட கொழும்பு, புத்தளம், பதுளை,



குருநாகல், கம்பஹா, புத்தளம், வன்னி, கேகாலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுடனான சந்திப்புகளும் கட்சித் தலைவர் ஹக்கீமுடன் தனித்தனியாக இடம்பெற்றதுடன், இவற்றிலும் கட்சியின் தேசிய அமைப்பாளர் எம்எஸ்.தௌபீக் எம்.பி கலந்துகொண்டார்.

அத்துடன், இந்தத் தேர்தல் தொடர்பான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீட நிர்வாக உத்தியோகர்களுடனான கலந்துரையாடலும் வெள்ளிக்கிழமை (06) மாலை தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோர் முன்னிலையில் கட்சியின் தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் நடைபெற்றது.

கண்டி மாவட்டத்துக்கான கலந்துரையாடல் கட்சித் தலைவர் ஹக்கீம் தலைமையில் சனிக்கிழமை (07) கண்டி நகரில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மின்கட்டண திருத்தம்: இறுதி தீர்மானம் இன்று

எதிர்பார்க்கப்படும் வகையில் மின் கட்டணத்தை அதிகரிக்க வாய்ப்பு. அனுமதி கிடைத்து, மின் உற்பத்தி நிலையங்களுக்கான மூலப்பொருட்கள் கிடைக்குமாயின் எதிர்வரும் காலங்களில் மின் துண்டிப்பின்றி தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

கட்டணத் திருத்தம் தொடர்பான அறிவுறுத்தல்களை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான நடைமுறைகள் சட்டத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, 4 மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் மின் கட்டண உயர்வுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்று வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று முதல் தீவிர பேச்சு

இந்நிலையில், பத்திரிக்கை ஆசிரியர்களை, ஜனவரி 6ஆம் திகதியன்று சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான பேச்சுவார்த்தையின் போது ஒருசில விடயங்களை அமல் படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பில் துரிதமாக கலந்துரையாடப்பட வேண்டும். பெப்ரவரி 04ஆம் திகதிக்கு முன்னர், தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முடியுமென நம்புகின்றேன். அதற்காக சகல கட்சிகளும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

# போலி தலதா மாளிகை மண்டபம் இடித்தழிப்பு

உலகளாவிய பௌத்தர்களை ஏமாற்றி, பெறுமதியான பொருட்களையும் பணத்தையும் பெற்றுக்கொண்டு ஜனக சேனாதிபதி என்ற ஒருவரால் போலியான தலதா மாளிகை கட்டப்பட்டு வருவதாகவும் தலதா மாளிகை தொடர்பில் சமூக ஊடகங்களில் சேபால் அமரசிங்க என்பவரால் வெளியிடப்பட்ட கருத்து, பௌத்தர்களை காயப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இவ்விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்ததையடுத்து, சேபால அமரசிங்க, சீ.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


இதேவேளை, சனிக்கிழமையன்று (07) குறித்த இடத்துக்கு விஜயம் செய்த முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, இன்னும் 2 வாரங்களில் இந்த இடத்துக்கு மீண்டும் வரும்போது கட்டடம் இடிக்கப்படாவிட்டால் அதனை இடித்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்தே மேர்வின் சில்வாவின் உத்தரவுக்கு அமைய ஜனக சேனாதிபதியால் கட்டடத்தை இடித்து அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# டெலிபோனுக்கே அமோக வெற்றி

தொடர்ந்து தெரிவித்த அவர், உள்ளூராட்சி தேர்தலுக்கு தேவையான வேட்பு மனு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகள் போட்டியிடும் அனைத்து மாவட்டங்களிலும் தமது கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தே போட்டியிடும் என்றார்.

தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தயாராக உள்ள நிலையில், அரசாங்கம் அதற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாகவும் எனவே, தேர்தலை நடத்துவதா, இல்லையா என்பது தொடர்பில்



ஜனாதிபதியிடம் கேட்டு கூறுமாறும் தெரிவித்தார்.

தேர்தலை நடத்த பணம் இல்லாவிட்டாலும் மக்களுடன் இணைந்து பணியாற்ற தான் தயாராக இருப்பதாகவும் தேர்தல் நடத்தப்பட்டால் ஐக்கிய மக்கள் சக்தி அமோக வெற்றியீட்டும் என்றார்.

# 'பேட் மேன்' என்றவர்கள் 'பஸ் மேன்' என்கின்றனர்

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 66 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் (5,000,000) ரூபாய் பெறுமதியான பாடசாலை பஸ் வண்டி நுகேகொடை மகமாயா மகளிர் கல்லூரிக்கு அன்பளிப்பு செய்யப்பட்டதன் பின்னர், அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் திருடர்கள் குழுவிடம் நாட்டை ஒப்படைத்த பின்னர், நாட்டை இஷ்டம் போல கொண்டு சென்று, நாட்டின் வளங்களை சுரண்டி, கொள்ளையடித்தனர். நாட்டையே வங்குரோத்தாக்கி விட்டு தற்போது மின்கட்டணத்தை உயர்த்த முயலுகின்றனர் என்றார்.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்ற மின்கட்டணத்தை உயர்த்தாமல் திருடப்பட்ட பணத்தை நாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டை கட்டியெழுப்ப முடியும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் குறித்த பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

பஸ்கள் வழங்கப்படுவது, இலவசக் கல்வி எனும் எண்ணக்கருவை மேலும் வலுப்படுத்துவதாகும். அரசியல் நோக்கத்திற்காக வழங்கப்படும் ஒன்றல்ல. நாடு முற்றாக வங்குரோத்து நிலையில் உள்ள வேளையில் எதிர்க்கட்சி மக்களுக்காக செய்யும் வேலைத்திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.



இவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவி தேவைப்படுவதாகவும், அவர்கள் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் அவை பெறப்படுவதாகவும், அதற்காக நல்ல தொடர்பாடல் இருக்க வேண்டும் என்றார்.

தற்போதைய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டால் டொலர் கிடைக்கும் என்று விசித்திரக் கதைகள் கூறப்பட்டாலும், இதுவரை டொலர் அதிகரித்தபாடில்லை. நன்கு கல்வி கற்கும் பிள்ளைகள் தலைமுறையினூடாகவே நாட்டை இந்நிலையில் இருந்து மீட்டெடுக்க முடியும் என்றார்.

# புலமைப்பரிசில் முடிவுகள் விரைவில் வெளியாகும்



டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணியின் 99 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்துள்ள பரீட்சைகள் திணைக்களம், இறுதி மதிப்பீடுகளுக்கு பின்னர் பரீட்சை முடிவுகள் கணினி மயமாக்கப்படும் என்று அறிவித்துள்ளது. மேலும், புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளும் நிறைவடைந்துள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை இந்த ஆண்டு மே மாதம் நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் இறுதித் திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சையை கருத்திற்கொண்டு ஜனவரி 17 ஆம் திகதி நள்ளிரவு முதல், உயர்தரப் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

வகுப்புகள் நடத்துதல், பட்டறைகள், கருத்தரங்குகள், விரிவுரைகள், மாதிரித் தாள்களை அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள், அச்சு அல்லது சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல் ஆகியவை தடை செய்யப்படுவதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

# சமூக ஊடகங்களுக்கு சிங்கபூர் சட்டம் வருகிறது

அரசியல், பொருளாதார மற்றும் தேர்தல் உள்ளிட்ட விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பத்திரிகை ஆசிரியர்கள் கலந்துரையாடினர். தலதா மாளிகை தொடர்பில், யூடியூபில் பதிவிடப்பட்ட ஒளிநாடா குறித்தும் ஜனாதிபதியின் கவனத்துக்கு இதன்போது கொண்டுவரப்பட்டது.

பத்திரிக்கைகளுக்கும் இலத்திரனியல் ஊடங்களில் விளம்பரம் செய்யவேண்டுமெனில் கட்டணம் செலுத்தவேண்டும். எனினும், சமூக ஊடகங்களில் இலவசமாக விளம்பரங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. அதனால், மேலே குறிப்பிட்ட பத்திரிக்கை, இலத்திரனியல் ஊடகங்களே பாதிக்கப்படுகின்றன என்றார்.

ஆகையால், யூடியூப், ஃபேஸ்புக் உள்ளிட்ட



சமூக ஊடக தளங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சிங்கப்பூரில் பயன்படுத்தப்படும் தொலைத்தொடர்பு மற்றும் சமூக ஊடகச் சட்டத்தைப் போன்ற சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றார். யூடியூப், ஃபேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடக தளங்களை யார்? எங்கிருந்து இயக்குகின்றனர் என்பது தொடர்பில் தேடியறிவது கடினமானது. ஆகையால், பயன்படுத்தப்படும் domainக்கு கட்டணம் அறவிடுவது தொடர்பிலும் அந்தச் சட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என்றார்.

# மீண்டும் இயங்குகிறது 1ஆவது மின்பிறப்பாக்கி

3 மின் பிறப்பாக்கி அலகுகள் மூலம் தேசிய மின்கட்டமைப்புக்கு 900 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும் நுரைச்சோலை அனல் மின்னிலையத்தின் 1ஆவது மின்பிறப்பாக்கி அலகு பராமரிப்பு பணிகளுக்காக கடந்த 22ஆம் திகதி நள்ளிரவு செயலிழக்கச் செய்யப்பட்டது. இதன் காரணமாக தேசிய கட்டமைப்பில் 300 மெகாவாட் மின்சாரம் இழக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் தினங்களில் முழுத் திறனுடன் குறித்த மின்நிலையம் இயங்கவுள்ளது.

# இலங்கையர்கள் 38 பேரும் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் 38 பேரின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. அவர்களின் கடவுச்சீட்டுகள் சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் உண்ணாவிரதப் போராட்டம், சனிக்கிழமை (07) கைவிடப்பட்டது.

கனடாவுக்கு முகவர்களால் அழைத்துச்செல்லப்பட்ட போது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் 38 இலங்கையர்கள், கர்நாடக மாநிலத்தின் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 38 இலங்கையர்களும் ஜனவரி 6ஆம் திகதி முதல் தொடர்



உண்ணாவிரதத்தை முன்னெடுத்திருந்தனர்.

தற்போது கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதால், நாடு திரும்புவதற்காக இந்திய அரசின் அனுமதிக்கு காத்திருப்பதாக குறித்த இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

# 'பாதுகாப்பு வீட்டில்' இருந்த பெண்கள் நாடு திரும்பினர்

அவர்களில் 11 பெண்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள், அவர்கள் அனைவரும் மஸ்கட் விமான நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். எனினும், அதில் இலங்கையைச் சேர்ந்த நான்கு பணிப்பெண்களுக்கான ஆவணங்களில் ஏற்பட்டிருந்த குறைபாடுகள் காரணமாக, ஓமான் விமான நிறுவனம் அந்த நால்வரையும் பொறுப்பேற்க மறுத்துவிட்டது.

எனினும், ஏனைய ஏழு பெண்களும் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள், தற்காலிக விசாவிலேயே ஓமானுக்கு ஏமாற்றி அனுப்பிவைத்துள்ளன என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# 9,10ஆம் திகதிகளில்...

அந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக தாய்லாந்து அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று (08) முற்பகல் நாட்டை வந்தடைந்தது.

தாய்லாந்தின் வர்த்தக பேச்சுவார்த்தைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அவுரமோன் சுப்தாவிதும் தலைமையிலான இந்தக் குழுவில் 26 பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர்.

பண்ட வர்த்தகம், சேவை வர்த்தகம், முதலீடு, மூல விதிகள், சுங்க ஒத்துழைப்பு, வர்த்தக வசதி, பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

2021 ஆம் ஆண்டில், இலங்கையிலிருந்து தாய்லாந்துக்கான ஏற்றுமதி 59 மில்லியன் டொலராகவும், தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கான இறக்குமதி 355 மில்லியன் டொலராகவும் இருந்தன.

தாய்லாந்துக்கு சாதகமான வர்த்தக சூழ்நிலை நிலவும் பின்னணியில், இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதோடு, தாய்லாந்துக்கான பிரவேசம் மூலம் நமது ஏற்றுமதிகளை, தாய்லாந்து சந்தைக்கு மட்டுமின்றி மற்ற ஆசியான் சந்தைகளுக்கும் மேம்படுத்துவது மற்றும் தற்போதுள்ள வர்த்தகத்திற்கான வரி அல்லாத வர்த்தகத் தடைகளை குறைப்பது என்பன இப்பேச்சுவார்த்தைகளின் நோக்கமாகும்.

தாய்லாந்து சந்தையில் இலங்கையின் இரத்தினக்கற்கள், தேயிலை போன்றவற்றை ஏற்றுமதி செய்வதற்கான பெரும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதோடு, இந்தப் பேச்சுவார்த்தைகளின் வெற்றியின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கும் புதிய துறைகளில் இருக்கும் வாய்ப்புகளை செயற்படுத்துவதற்கும் வழிகள் திறக்கப்படும்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் இயங்கும் தேசிய வர்த்தகப் பேச்சுவார்த்தைக் குழு, இலங்கை சார்பாக பங்கேற்பதோடு, வெளிவிவகார அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, நிதி அமைச்சின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு விவகாரங்கள் திணைக்களம் மற்றும் வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

# மஹவ - ஓமந்தை வரையிலான ரயில் பாதை அபிவிருத்தி ஆரம்பம்

கடந்த 70 வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாத மஹவ - ஓமந்தை வரையிலான ரயில் பாதை அபிவிருத்திப் பணிகள் நேற்று (08) ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த ரயில் பாதையில் வேகமாகப் பயணிக்க முடியாத நிலையே இருக்கிறது. வேகமாகப் பயணித்தால் ரயில் விபத்துகள் ஏற்படுகின்றன. இதனால் பயணிகள் பெரும்



சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் என்றார்.

இந்தியாவின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 3,300 கோடி ரூபாய் செலவில் இந்திய அரச நிறுவனம் ஒன்று இந்த ஒப்பந்தத்தை ஏற்று அபிவிருத்திப் பணிகளை செய்ய உள்ளது. இதனால் அடுத்த ஐந்து மாதங்களுக்கு அநுராதபுரம் - ஓமந்தை வரையிலான ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றன என்றார்.

இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டம் என்கிற ரீதியில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில்கள் அநுராதபுரம் வரையில் மாத்திரம் சேவையில் ஈடுபடும். அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறைக்குப் பயணிப்பவர்களுக்கு ஏற்றவகையில் அநுராதபுர ரயில் நிலையத்திலிருந்து தனியார், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் இயக்கப்படும் என்றார்.





## லசந்தவுக்கு மலரஞ்சலி...

பிரபல புலனாய்வு ஊடகவியலாளரும் சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்று (08) ஞாயிற்றுக்கிழமையுடன் 14 வருடங்கள் நிறைவடைந்தன. அதனை நினைவுகூர்ந்து கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம் ஆகியன இணைந்து, அன்னாரது உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து, ஈகைச்சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தின.

# நிந்திப்பவர்களுக்கு எதிராக சட்டங்களை கடுமையாக்க வேண்டும்

பௌத்த மதத்துக்கு எதிராகச் செயற்படும் நபர்கள், நிறுவனங்களுக்கு எதிராக சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென மாநாயக்க தேரர்கள் உள்ளிட்டோர் அரசாங்கத்துக்கு கூறியுள்ளனர்.

தலதா மாளிகை மாத்திரமன்றி, பௌத்த சாசனத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில்



செயற்படும் நபர்கள், நிறுவனங்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

போலியான தலதாமாளிகை அமைக்கப்பட்டதுபோல, பௌத்த சாசனம் தொடர்பில் போலியான தகவல்களைக்கூறி ஏமாற்றுபவர்கள் தொடர்பில் பௌத்த மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றார்.

# 'Voice of Global South' மாநாடு 2 நாள்கள் நடைபெறும்




புதியதும் தனித்துவமானதுமான ஒரு முயற்சியாக 2023 ஜனவரி 12-13 ஆகிய திகதிகளில் விசேட மெய்நிகர் மாநாடொன்றை இந்தியா நடத்தவுள்ளது. உலகின் தென்பகுதி நாடுகளின் '"ஒருமித்த குரல், ஒருமித்த நோக்கம்" என்ற தொனிப்பொருளுடனான இந்த 'Voice of Global South'' மாநாடு, உலகளாவிய தென்பகுதி நாடுகள் தமது முன்னுரிமைகள் மற்றும் நோக்குநிலையினை பொதுவான ஒரு தளத்தில் பகிர்வதற்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது. இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உலகளாவிய ரீதியில் 120 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2. பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் சப்க சாத், சப்க விகாஸ், சப்க விஸ்வாஷ் மற்றும் சப்க பிரயாஸ் என்ற தொலைநோக்கினால் ஈர்க்கப்பட்டுள்ள இந்த முன்னெடுப்பு வசுதைவ குடும்பகம் என்ற இந்திய தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

3. பங்காளி நாடுகளால் இம்மாநாட்டில் முன்வைக்கப்படும் பெறுமதியான உள்ளீடுகள் உலகளாவிய ரீதியில் அங்கிகரிக்கப்படுவதனை உறுதிசெய்ய இந்தியா தொடர்ந்து செயலாற்றும்.

4. அத்துடன், ஜி20 மாநாடுகள் மூலமான எதிர்பார்ப்புகள் மற்றும் தமது சிந்தனைகளை ஜி20 அமைப்பில் அங்கம் வகிக்காத நாடுகள் ஆணித்தரமாக முன்வைப்பதற்கான விசேட வாய்ப்பினை ஜி20 இந்திய தலைமைத்துவம் வழங்குகின்றது. ஜி20 பங்காளி நாடுகள் மட்டுமல்லாது உலகின் தென்பகுதியிலுள்ள ஏனைய நாடுகளின் ஆலோசனைகளுடனுமே ஜி20 இந்திய தலைமைத்துவம் வடிவமைக்கப்படுமென பிரதமர் நரேந்திர மோடி கூறியதற்கமைவாக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

5. இந்த மாநாடு 10 அமர்வுகளாக நடைபெறுகின்றது. ஜனவரி 12 ஆம் திகதி நான்கு அமர்வுகளும் ஜனவரி 13 ஆம் திகதி ஆறு அமர்வுகளும் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு அமர்வுகளிலும் 10 முதல் 20 வரையான நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

6. அரச தலைவர்கள் மட்டத்தில் நடைபெறும் ஆரம்ப மற்றும் நிறைவு நிகழ்வுகளை பிரதமர் தலைமை தாங்கி நடத்தவுள்ளார். தலைவர்கள் மட்டத்திலான ஆரம்ப அமர்வுகள் Voice of Global South - for Human-Centric Development" என்ற தொனிபொருளிலும் தலைவர்கள் மட்டத்திலான நிறைவு அமர்வுகள் "Unity of Voice-Unity of Purpose" என்ற தொனிப்பொருளுடனும் நடைபெறவுள்ளது.

7. அதற்கு மேலதிகமாக அமைச்சர்கள் மட்டத்திலான 8 அமர்வுகள் பின்வரும் தொனிப்பொருட்களுடன் நடைபெறவுள்ளன.

'மக்களை மையமாகக் கொண்ட அபிவிருத்திக்கு நிதியளித்தல்' குறித்து நிதி அமைச்சர்களின் அமர்வு

'சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறைகளுடன் வளர்ச்சியை சமநிலைப்படுத்தல்' குறித்து சூழல்துறை அமைச்சர்கள் மட்டத்திலான அமர்வு

'உலகின் தென்பகுதி நாடுகளின் முன்னுரிமைகள் ஒத்திசைவான சூழலை உறுதிப்படுத்தல்' என்ற தொனிப்பொருளில் வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட அமர்வு

'சக்திப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செழுமைக்கான வழிகாட்டல்' குறித்து சக்தித்துறை சார்ந்த அமைச்சர்கள் மட்ட அமர்வு

'நெகிழ்ச்சித் தன்மையுடைய சுகாதாரப் பராமரிப்பு முறைமையை கட்டிஎழுப்புதல்' குறித்து சுகாதாரத் துறை அமைச்சர்களின் அமர்வு

'மனித வள அபிவிருத்தி மற்றும் ஆளுமையை கட்டிஎழுப்புதல்' குறித்து கல்வி அமைச்சர்களின் அமர்வு

'உலகளாவிய தென்பகுதி நாடுகளிடையில் ஒருங்கிணைப்புகளை உருவாக்குதல் - வர்த்தகம், தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை மற்றும் வளங்கள்' குறித்து வர்த்தக மற்றும் வியாபரத்துறைசார் அமைச்சர்களின் அமர்வு

'ஜி20 இந்திய தலைமைத்துவத்துக்கான பரிந்துரைகள்' குறித்து வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட அமர்வு நடைபெறும் என, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடுத்த வாரம் முதல் முட்டை இறக்குமதி

நாட்டில் முட்டை விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான பொறுப்பை இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்திடம் வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ வழங்கியுள்ளார்.

முட்டை இறக்குமதி செய்யப்பட்டால் 45 ரூபாய் என்கிற குறைந்த விலைக்கு முட்டையை நாடுமுழுவதிலும் விற்பனைச் செய்ய முடியும் எனவும் இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ,

இவ்வாரத்தின் ஆரம்பத்தில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான விலை மனுக்கள் கோரப்பட்டு அடுத்த வாரம் முதல் முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நாட்டுக்கு தேவையான முட்டைகளின் அளவு தொடர்பில் நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரசபையிடம் அறிக்கை ஒன்றை கோரியுள்ளேன். அந்த அறிக்கைக் கிடைத்ததும். நாட்டுக்கு அவசியமான அளவு மாத்திரம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் சதொச, சாதாரண சந்தைகள், அங்காடிகள் ஊடாகவும் விற்பனைச் செய்யப்படும். அதுபோல முட்டைகளை விநியோகிப்பதற்கென ஒரு வலையமைப்பு இருக்கிறது என்றார்.

முட்டை இறக்குமதி செய்தால் பறவைக் காய்ச்சல் வருமென கூறுகிறார்கள். வேறு நோக்கங்களுக்காகவே இவ்வாறு கூறுகிறார்கள் என்றார்.

# தவணைகள், பரீட்சைகள் தொடர்பான தகவல்கள்



■ வி.ரி. சகாதேவராஜா

2023ஆம் கல்வி ஆண்டில் தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கான உத்தேச தவணைகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

2023ஆம் கல்வி ஆண்டில் 175 நாட்கள் பாடசாலைகளை நடாத்த கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது.

இதன்படி முதலாந்தவணை மார்ச் 27ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 20ஆம் திகதியோடு நிறைவடைகிறது. இது மூன்று கட்டங்களாக நடைபெறும். அதிலும் முதலாவது தவணையில் முதலாம் கட்டம் 27.03.2023 தொடக்கம் 04.04.2023 வரைக்கும் நடைபெறும்.

இரண்டாம் கட்டம் 20.04.2023 தொடக்கம் 12.05.2023 வரை நடைபெறும். மூன்றாம் கட்டம் 25.05.2023 தொடக்கம் 20.07.2023 வரை நடைபெறும்.

இரண்டாம் தவணை 24.07.2023 தொடக்கம் 13.10.2023 வரை உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி 56 நாட்கள் பாடசாலை நடைபெறும். இதேவேளை, மூன்றாம் தவணை 14.11.2023 தொடக்கம் 09.02.2024 வரையில் 58 நாட்கள் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தேச தவணைகளில் மாற்றம் ஏற்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மே 13ஆம் திகதி ஆரம்பமாகிறது. 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர தரப் பரீட்சை ஒக்டோபர் 14ஆம் திகதி ஆரம்பமாகிறது.

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெப்ரவரி 09ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதிலும் மாற்றங்கள் ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனமாக ஒன்றிணைய ஐ.தே.க அழைப்பு

தேசிய அதிவேக நெடுஞ்சாலை அதிகாரசபை நாட்டுக்கு சுமையென தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, இனமாக பிரிந்திருந்தால் நாட்டுக்கு தோல்வியே கிட்டும் என்றார்.

இந்த அதிகாரசபையின் ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளத்துக்கு மாத்திரம் ஒரு பில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது. நாட்டில் 500 கிலோமீற்றர் தூரம்கூட நெடுஞ்சாலைகள் இல்லை. இவ்வாறான நிலையில் நெடுஞ்சாலைகளில் 3,000 பேர் வரையில் ஊழியர்களாக இருக்கின்றனர் என்றார். யார் ஆட்சியில் இருந்தாலும் அரசியல்வாதிகளால் தேசிய அதிவேக நெடுஞ்சாலை அதிகாரசபைக்கு



ஊழியர்களை புதிதாக இணைக்க முடியும் என்பதால், அரசியல்வாதிகள் தொடர்ந்து புதிய நியமனங்களை வழங்கி வருகிறார்கள். இவ்வாறான நிலையில் நாட்டை முன் நோக்கிக் கொண்டு செல்ல முடியாது எனவும் தெரிவித்தார்.

நாட்டிலிருந்த தேசிய தலைவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இனம் என்கிற ரீதியில் நாம் பிரிந்திருந்தால் நாடு என்கிற ரீதியில் நாம் தோல்வியை சந்திப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு கொளுத்தப்பட்டிருந்தாலும், தாக்கப்பட்டிருந்தாலும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றே அவர் கூறுகிறார் என்றார்.

# பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு கனடா மனிதாபிமான உதவி

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் (IFRC) மனிதாபிமான முறையீடுகளுக்கு பதிலளிக்கும் வகையில், இலங்கையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு கனடா 3 மில்லியன் (ஏறத்தாழ 817 மில்லியன் இலங்கை ரூபாய்) டொலர்களை வழங்குகிறது.

அவசரகால உணவு உதவி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து சேவைகள், பாதுகாப்பான நீர் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை மிகவும் தேவைப்படுபவர்களுக்கு வழங்குவதற்கு ஆதரவளிப்பதற்கு, ஐ.நா மற்றும் IFRC மூலம் அவர்களின் உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து இந்த பங்களிப்பு வழங்கப்படும்.

மேலும், இலங்கையின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் உட்பட இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவதற்கும் தொடர்ந்து சர்வதேச உதவித் திட்டங்களை கனடா முன்னெடுத்துள்ளது என்று ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## SALE OF REGISTERED VEHICLE

| DESCRIPTION | YOM | YARD |
|---|---|---|
| MARUTI A-STAR WP KO-XXXX | 2010 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| TOYOTA VITZ SP CBA-XXXX | 2016 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| MAZDA 3 WP KH-XXXX | 2007 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| SUZUKI EVERY WP PC-XXXX | 2008 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| SUZUKI WP CAZ-XXXX | 2017 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| MAHINDRA BOLERO NW DAH-XXXX | 2019 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| TOYOTA HIACE CP NB-XXXX | 2004 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| ASHOK LEYLAND without Battery NW JJ-XXXX | 2004 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| ASHOK LEYLAND without Battery NW LE-XXXX | 2006 | 726/1, Madawala Road, Arawwala, Pannipitiya |
| TATA TIPPER WP LN-XXXX | 2017 | 726/1, Madawala Road, Aruwala, Pannipitiya |
| TOYOTA AXIO SP KK-XXXX | 2007 | 375, 10C1, Shanthi MW, Makumbura, Kottawa |

Vehicle inspection daily from 9.00 a.m to 3.30 p.m,
Offers are called for the sale of the above vehicle from 09th January 2023.

Offer forms are available on non Refundable payment of Rs. 300/- at Pan Asia Bank, 135, Galle Road, Wellawatte, Colombo-6.

Offers are accepted till 3.30 p.m on 17th January 2023

Management reserves the right to cancel or withdraw any offers made in respect of above.

Manager Recoveries
**Pan Asia Banking Corporation PLC**
No. 135, Galle Road, Wellawatte, Colombo-6
**Tel: 0114-343130, 0768371340, 0778936453**

தொழில்களுக்கு இடையூறாக அமைந்துள்ள

# அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி

## வாயில் கறுப்புத்துணி கட்டி போராட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி, கிராஞ்சியில் தமது வாழ்வாதார தொழில்களுக்கு இடையூறாக அமைந்துள்ள அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி, நூறாவது நாள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கடற்தொழிலாளர்கள், சனிக்கிழமை (07) கறுப்பு துணிகளால் வாய்களைக் கட்டி தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாங்கள், கடலட்டை பண்ணைகளுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதையும் தங்களுடைய வாழ்வாதார தொழில்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் அட்டைத் தொழில்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் கருத்துகளை முன்வைத்திருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களினுடைய கோரிக்கைகள் நியாயமாக காணப்படுமாயின் அதுதொடர்பில் பரிசீலிக்கப்படும் எனறார்.

கசிப்பு காய்ச்சிய இருவர்

## பொதுமக்களால் மடக்கி பிடிப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

பூநகரி, முக்கொம்பனில் கசிப்பு காய்ச்சிய இருவர் பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு, கசிப்பு, உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. இச்சம்பவம் சனிக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

கசிப்பு காய்ச்சப்படுவதாக பொது மக்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, ஒன்று திரண்ட மக்கள் கசிப்பு காய்ச்சிய இருவரை மடக்கி பிடித்ததுடன் பூநகரி பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். பொலிஸார் வருவதற்கு தாமதம் ஏற்பட்ட நிலையில், கசிப்பு காய்ச்சிய இருவரும் தப்பிச் சென்று விட்டனர்.

முக்கொம்பனுக்கு வந்த பொலிஸாரிடம் கசிப்பு, உபகரணங்கள் என்பன பொது மக்களால் கையளிக்கப்பட்டன. 10 நாள்களுக்கு முன்னர், முக்கொம்பன் கிராமத்தில் போதைப்பொருட்களை கட்டுப்படுத்துமாறு ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில், கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களை தடுக்கும் செயற்பாடுகளிலும் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.



## இராணுவத்தால் கடற்கரையை தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

இலங்கை இராணுவத்தினரால், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளைத் தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளையின் கீழுள்ள 59ஆவது காலாட் படைப்பிரிவின் 591ஆவது காலாட் பிரிகேடின் 12ஆவது இலங்கை இலேசாயுத காலாட் படையினர், கடற்கரையை சுத்தமாக வைத்திருக்கும் முயற்சியை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகம்

## நல்லூரில் திறப்பு

■ நிதர்சன் வினோத்

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தொகுதிக்கான பிரதான அலுவலகம், நேற்று (08) நல்லூர் செட்டித்தெரு பகுதியில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவால் திறக்கப்பட்டது.

இந்நிகழ்வில், எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான உமாச்சந்திரா பிரகாஷ், யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட அமைப்பாளர் விஜய்காந்த், யாழ். மாவட்ட அமைப்பாளர் கு.மதன்ராஜ், யாழ்ப்பாண தொகுதி பிரதம அமைப்பாளர் ஜெயேந்திரன், தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவ தியாகேந்திரன் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## கடலட்டைப் பண்ணைக்கான அனுமதிப்பத்திரங்கள்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி, இலவங்குடா பகுதியில் அட்டை வளர்ப்பை மேற்கொள்ளும் வகையில் 83 பேருக்கான கடலட்டைப் பண்ணைக்கான அனுமதி பத்திரங்கள் சனிக்கிழமை (07) அமைச்சர் டாக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிராஞ்சி ஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பூநகரி பிரதேச செயலாளர் அகிலன், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மீனவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## சாதனை மாணவர்கள் மூவருக்கு கௌரவம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டைகட்டியகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மூன்று மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, அம்பலப்பெருமாள்குளம் பொது நோக்கு மண்டபத்தில் அம்பலப்பெருமாள்குளம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வேதநாயகம் குணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

2021 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவன் சிறிஸ்கந்தராசா சிறிமேனகன் 3B பெறுபேற்றையும் குணசிங்கம் சுயாந் 3B பெறுபேற்றையும் ஜெகதாஸ் யசிந்தன் 2 B C பெறுபேற்றையும் பெற்றுள்ளனர். நிகழ்வில், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக தலா 30,000 ரூபாய் நிதி அன்பளிப்பு வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிதியை புலம்பெயர் உறவுகள் வழங்கியிருந்தனர்.

## பன்றி நெல்லின் தாக்கம்

■ நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி மாவட்டத்தில் பன்றி நெல்லின் தாக்கம் அதிகரித்து வருவதால், பல விவசாயிகள் பொருளாதார ரீதியாக தாக்கம் அடைந்துள்ளார்கள் என கிளிநொச்சி இரணைமடு குள கமக்கார அமைப்புகளின் சம்மேளன செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இக்களை நெல்லை கட்டுப்படுத்த இயலாத நிலையில், நெற்செய்கையைக் கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதை பயிர் நிலையில் இனங்காண முடியாததால், கையால் பிடுங்கியும் கட்டுப்படுத்த இயலாது. பன்றி நெல் கதிர் வந்த பின்னர், கைகளால் பிடுங்கி கட்டுப்படுத்துவது மிகக் கடினமான காரியமாகும்.

தற்போதைய மனித வலுக் குறைவு, அதிகரித்த கூலி காரணமாக இக்களை நெல்லைக் கட்டுப்படுத்துவது இயலாதுள்ளது. இதனை கட்டுப்படுத்த இரசாயன நாசினிகள் எவையும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதைக் கட்டுப்படுத்த இரண்டு, மூன்று போகங்களுக்கு உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடாமல், வயலை தொடர்ந்து உழவேண்டும். இது விவசாயியை பொருளாதார பெரும் பாதிப்படைய செய்து விடும்.

எனவே, துறைசார் விவசாய ஆராய்ச்சியாளர்கள் கூடுதல் அக்கறை கொண்டு, இப்பன்றி நெல்லைக் கட்டுப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என விவசாய சமூகம் எதிர்பார்க்கின்றது.

பரீட்சைக்குத் தோற்றவிருந்த உயர்தர வகுப்பு

# மாணவன் கடலில் மூழ்கி பலி

■ ஏ.எச்.ஏ ஹூஸைன்



மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி கடலில் மூழ்கி உயிரிழந்த, ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் உயர்தர கலைப்பிரிவில் கற்கும் மாணவனான மனாப்தீன் அப்துர் றஹ்மான் (வயது 19) என்பவரின் சடலம், சனிக்கிழமை (06) மாலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்வரும் 23ஆம் திகதி பரீட்சைக்குத் தோற்றவுள்ள இம்மாணவனும் அவரது குடும்பத்தினரும் சனிக்கிழமை (07) சவுக்கடி கடற்கரைக்குச் சென்று, தனது சகோதரருடன் கடலில் குளித்துக் கொண்டிருக்கும்போது, பாரிய அலையொன்றால் இருவரும் அள்ளுண்டு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சற்று நேரத்தில் கடற்கரையை நோக்கி வந்த பாரிய அலையின் மூலம், கடலில் மூழ்கிய இருவரும் கரையொதுங்கினர். அவ்வேளையில், அப்துர் றஹ்மான் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளார். இவரது சகோதரரான உபைதீன் றஹ்மான் (வயது 17) உயிருக்குப் போராடிய நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மரணமடைந்த மாணவனின் தந்தை மூன்றரை வருடங்களின் பின்னர் வெள்ளிக்கிழமை (06) மாலைதான் கட்டாரிலிருந்து வீடு திரும்பியிருந்த நிலையில், சனிக்கிழமை காலை குடும்ப சகிதம் சவுக்கடி கடற்கரைக்கு சென்ற போதுதான் இந்தத் துயரசம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்த மனாப்தீன் அப்துர் ரஹ்மானின் மரண விசாரணைகளை, மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம் நஸீர் முன்னெடுத்தார்.







## நூல் வெளியீட்டு விழா

திருகோணமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, கல்லூரியின் முன்னாள் அதிபர் சி. தண்டாயுதபாணி எழுதிய 'இந்துக் கல்லூரியின் வரலாறும் வளர்ச்சியும் 1897–2022' எனும் நூல் வெளியீட்டு விழா, கல்லூரியின் அதிபர் செ. பத்மசீலன் தலைமையில் சனிக்கிழமை (07) கல்லூரியின் சம்பந்தர் மண்டபத்தில் நடைபெற்றது.


இந்நிகழ்வில், மட்டக்களப்பு இராமகிஷ்ண மிஷன் முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார். ஆசியுரையை 'வேதாகமமாமணி' பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் வழங்கினார்

அ. அச்சுதன்

ஏறாவூர் இளைஞர்

## சவூதியில் விபத்தில் மரணம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



ஏறாவூர், மீராகேணியை சேர்ந்த முஹமது ஹபீப் (வயது 25) எனும் இளைஞர், சவூதி அரேபியாவில் விபத்தில் வெள்ளிக்கிழமை (06) உயிரிழந்துள்ளார்.

ஒருவருடத்துக்கு முன்னர், சவூதி அரேபியாவுக்கு சாரதி தொழிலுக்காக சென்ற இவர், அபஹா எனும் இடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றின் போதே உயிரிழந்ததாக கூறப்படுகின்றது.



தீயால் சேதமடைந்த அலைபேசி திருத்தும்

## கடைக்கு நிதியுதவி

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி முதலாம் குறிச்சி பிரதான வீதியிலுள்ள வாலிதைன் பள்ளிவாயல் பகுதியில், கடந்த மாதம் ஏற்பட்ட தீ விபத்தில், முழுமையாக சேதமடைந்த அலைபேசி திருத்தும் வர்த்தக நிலையத்துக்கு உதவும் பொருட்டு வாலிதைன் பள்ளிவாயல் பகுதி வர்த்தகத்தர்களின் அமைப்பால், சனிக்கிழமை (07) நிதி உதவி செய்யப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, வாலிதைன் பள்ளிவாயல் பகுதி வர்த்தகத்தர்கள் அமைப்பின் தலைவர் அஜ்வத், செயலாளர் எஸ்.ஏ.கே பழீலுர் ரஹ்மான், பொருளாளர் ரஹீம் உட்பட அதன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு, வர்த்தக நிலைய உரிமையாளரிடம் நிதியைக் கையளித்தனர்.



## காரைதீவில் வர்த்தகர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்

■ வி.ரி சகாதேவராஜா

காரைதீவில் முதன்முறையாக வர்த்தகர் சங்கம் வெள்ளிக்கிழமை (06) கலாச்சார மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.


காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்னிலையில், தலைவராக முன்னாள் உதவி தவிசாளர் க. தட்சணாமூர்த்தியும் செயலாளராக கே. குகனேஸ்வரனும் பொருளாளராக கே. மேகலாவும் உபதலைவராக ரி. துரைராஜாவும் உபசெயலாளராக பி. தசதராவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 21 சிரேஷ்ட உறுப்பினர்களையும் 298 அங்கத்தவர்களையும் கொண்ட இச்சங்கம், காரைதீவு 1-12 பிரிவுகளை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

கங்குவேலி அகஸ்தியர் கோவிலில்

## இலவச சித்த மருத்துவ முகாம்

■ அபு அலா



உலக சித்தர் தினத்தையொட்டி திருகோணமலை கோணேசபுரி சித்த போதனா வைத்தியசாலையும், திருமலை வளாக சித்த மருத்துவத்துறையும் இணைந்து மூதூர், கங்குவேலி அகஸ்தியர் கோவிலில் மாபெரும் இலவச சித்த மருத்துவ முகாம், சிறப்பு யாகம், அன்னதானம் ஆகிய நிகழ்வுகளை நடத்தவுள்ளதாக சித்த போதனா வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி வைத்தியர் திருமதி சியாமளா வர்ணகுலேந்திரன் தெரிவித்தார்.

அகஸ்திய மாமுனிவர் பிறந்த நாளான இன்று (09), சித்தர் தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது. இவர் சித்த மருத்துவத்தின் தந்தையாக மதிக்கப்படுகின்றார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான

# தேர்தல் வேண்டும்

## திகா எம்.பி கடும் கோரிக்கை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமது பிரதிநிதிகளைச் தெரிவுச் செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்று (8) நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டில் பொருளாதார சிக்கல் காணப்பட்டாலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமது பிரதிநிதிகளை அனுப்புவதற்கு கட்டாயமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்த அவர், நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமது கட்சியின் பிரதிநிதிகள் களமிறங்கவுள்ளனர் என்றும் தற்போது வேட்புமனு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், ஐக்கிய மக்கள் சக்தி பாரிய வெற்றியை ஈட்டும். அதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வீழ்ச்சியடையும் என்றார்.



# முட்டையின் விலை ஹட்டனில் எகிறியது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகருக்குள் முட்டையின் விலை தொடந்தும் அதிகரித்து வருவதாக பிரசேவாசிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஹட்டனில் முட்டையொன்று 60, 65 மற்றும் 70 ரூபாய்க்கும் கட்டுப்பாடின்றி விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

முட்டை விலை அதிகரிப்பால் பிள்ளைகளுக்கு முட்டை வழங்குவது குறைவடைந்துள்ளதாகவும் இதனால் தமது பிள்ளைகள் போசனை மட்டத்திலும் பிரச்சினையை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

# ஹெரோய்னுடன் கலகெதரவில் ஒருவர் கைது

■ ஷேன் செனவிரத்ன

கண்டி விசேட பொலிஸ் குழுவினரால் கலகெதர பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, 26 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த நபர், கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி உதவி பொலிஸ் அதிகாரி சமன் அங்கமனலவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, கலகெதர பிரதேசத்திலுள்ள வீடொன்றை சோதனையிட்ட போது, அங்கு 26 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.



அத்துடன் சந்தேகநபர் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் அலைபேசிகள் 7, வங்கி அட்டைகள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரும் கைப்பற்றப்பட்ட பொருட்களும் அலதெனிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன், சந்தேகநபர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்

# தபால் பெட்டிக்கு தாவினார் அரவிந்தகுமார்





■ எஸ்.கணேசன்

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகியன கூட்டணியாக இணைந்து, தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதிப் பொது செயலாளர் எஸ். அஜித்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான அ.அரவிந்தகுமார் தலைமையில் மத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் ஐக்கிய மக்கள் முன்னணி போட்டியிடும்

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தலைமையில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் சார்பில் மேல் மாகாணம், வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் பல கட்சிகள் இருக்கின்ற போதிலும் மக்களுடைய தேவைகளை அறிந்து செயற்படாமல் இருந்ததன் காரணமே பல்வேறு உரிமைகளை மக்கள் இழந்து நிற்கின்றனர். தங்களது தேவைகளை கூட நிவர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

அதேவேளை, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்ற ரீதியில் நாங்கள் மக்களுடைய அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே தான் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் களம் இறங்க, மக்களுடைய ஆணையை பெறுவதற்கு இம்முறை தேர்தலிற்கு தயாராகிவுள்ளோம்.

எனவே, எமது கட்சியின் ஊடாக உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட விரும்புவர்கள் தங்களுடைய விண்ணப்பபடிவங்களை பூர்த்தி செய்து ஐக்கிய மக்கள் முன்னணியின் நிர்வாக குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.







# அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டன

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸின் பணிப்புரைக்கு அமைய, பசறை தொகுதி அமைப்பாளர் தமிழ்செல்வனின் சொந்த நிதியிலிருந்து பசறை, கல்போக் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையின் 50 மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ராமு தனராஜா)


இரவில் நடமாடும் சிறுத்தையால்

# நியூகொலனி மக்கள் அச்சத்தில்

■ துவாரகஷான்

இரவு நேரங்களில் சிறுத்தை நடமாட்டம் காரணமாக அக்கரப்பத்தனை, நியூ கொலனி பகுதி மக்கள் அச்சத்தில் இருப்பதாகவும் கடந்த சில நாள்களாக சிறுத்தையின் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் வசிக்கும் எஸ். நாகராஜ் என்பவரின் வீட்டுக்கு சிறுத்தை ஒன்று, இரவில் வந்து செல்லும் காட்சி, அவரின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி .சி. டி.வி கமெராவில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



இது தொடர்பில் குடும்ப உறுப்பினர்கள் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், சிறுத்தையின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த, அதிகாரிகள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில்

# கராம்பின் விளைச்சல் அதிகரிப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

ஏற்றுமதி பயிர்களில் ஒன்றான கராம்பு, இம்முறை சிறந்த விளைச்சலை தந்துள்ளதென மாத்தளை மாவட்ட கராம்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளதுடன், இதற்கான உரிய விலை கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஒரு கிலோ கிராம் பச்சை கராம்பு 850 ரூபாய் தொடக்கம் 900 ரூபாய்க்கு விற்கப்படுவதுடன், ஒரு கிலோ கிராம் காய்ந்த கராம்பு மூவாயி ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுவதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், கராம்பு அறுவடைக்கான தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் உரிய



காலத்தில் அறுவடை செய்யப்படாவிடின் உரிய பலன் கிடைக்காது என்றும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை, ஓவிலிகந்த, யட்டவத்த, அம்பகங்கோரல, இரத்தோட்டை உள்ளிட்ட பகுதிகளில் கராம்பு அதிகமாக பயிரிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாத்தளையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

# உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

■ தவசீலன்

மாத்தளை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளுக்கு நீதி கோரி,கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று (08) ஈடுபட்டனர். இதன்போது துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

மாத்தளை மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று பகல் 01 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தில் 1989 முதல்



1991 வரை காணாமல் 1,042 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மொனராகலை மாவட்டத்தில்

# 3,87,016 பேர் வாக்களிக்கத் தகுதி

■ சுமணசிறி குணதிலக

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலுக்காக மொனராகலை மாவட்டத்தில் 3,87,016 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என மொனராகலை உதவி தேர்தல் ஆணையாளரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான நாகலிங்கம் ரேகன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மொனராகலை தொகுதியில் 11 உறுப்பினர்களும் சியம்பலாண்டுவ தொகுதியில் 14 உறுப்பினர்களும் படல்கும்பர தொகுதியில் 11 உறுப்பினர்களும் புத்தல தொகுதியில் 11 உறுப்பினர்களும் கதிர்காமம் தொகுதியில் 9 உறுப்பினர்களும் வெல்லவாய தொகுதியில் 14 உறுப்பினர்களும் தனமல்வில தொகுதியில் 20 உறுப்பினர்களும் பிபிலை தொகுதியில் 10 உறுப்பினர்களும் மெதகம தொகுதியில் 10 உறுப்பினர்களும் மடுல்ல தொகுதியில் 11 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பிரதேச சபை ரீதியில் மொனராகலை தொகுதியில் 40,881 வாக்காளர்களும் சியம்பலாண்டுவ தொகுதியில் 46,221 வாக்காளர்களும் படல்கும்பர தொகுதியில் 35,405 வாக்காளர்களும் புத்தல தொகுதியில் 44,326 வாக்காளர்களும் கதிர்காமம் தொகுதியில் 14,870 வாக்காளர்களும் வெல்லவாய தொகுதியில் 52,379 வாக்காளர்களும் தனமல்வில தொகுதியில் 59,420 வாக்காளர்களும் பிபிலை தொகுதியில் 35,590 வாக்காளர்களும் மெதகம தொகுதியில் 31,540 வாக்காளர்களும் மடுல்ல தொகுதியில்26,879 வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

# 18ஆம் வளைவு பகுதியில் மண்மேடு சரிந்தது

■ ஷேன் செனவிரத்ன

மஹியங்கனை வீதியின் 18ஆம் வளைவுப் பகுதியில் பாரிய மண்மேடு நேற்று (08) காலை சரிந்து விழுந்ததால் குறித்த வீதியிலான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டதென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த வீதியின் 14, 15ஆம் வளைவுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் மண்மேடு சரிந்து விழுந்துள்ளது என்று மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த வீதியைப் பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் பயன்படுத்துமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# குட்டித் தேர்தலும் கூட்டணிகளுக்காக வகுக்கப்படும் வியூகங்களும்

“இலங்கை உட்பட உலகில் மூன்றிலொரு பகுதி நாடுகளில் இந்தாண்டு பொருளாதார மந்தநிலை நிலவும்” என சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டாலினா ஜார்ஜிவா எச்சரித்துள்ள நிலையில், நமது நாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்து களமிறங்குவது தொடர்பிலான பேச்சுகள் தீவிரமடைந்துள்ளன.

சின்னச் சின்ன கட்சிகள் ஒன்றாக இணைந்து, புதிய கூட்டணியை அமைப்பதற்கான வியூகங்களை வகுத்துக்கொண்டிருக்கின்றன. பெரிய கட்சிகளில் இருந்து பிரிந்து, சுயேட்சையாக இயங்கும் குழுக்களும் ஓரணியில் ஒன்றிணைந்து களமிறங்கும் நோக்கில் பேசி வருகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிக்காலம் நிறைவடையாத நிலையில், தேர்தலுக்கான அறிவிப்பை, தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ளது. அதன் பிரகாரம், ஜனவரி 18ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

நாடு தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் நிலைமையை கருத்தில் கொண்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இல்லை, தேர்தலை நடத்தவேண்டுமென மற்றுமொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், பத்திரிகை ஆசிரியர்களை ஜனவரி 6ஆம் திகதியன்று சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகளை விளக்கியதுடன், தேர்தல் பிரசாரம் செய்வதற்கு தேவையான பணம் பெரிய கட்சிகளிடமே இல்லையென எடுத்துரைத்தார்.

அத்துடன், தேர்தல் நடத்துவது பற்றி தேர்தல் ஆணைக்குழுவுக்குள் ஒற்றுமையில்லை.முதலில் அவர்கள் ஒருமித்த முடிவுக்கு வரவேண்டும். அது தொடர்பில் எடுத்துரைத்திருந்தேன். ஏதாவது சட்டப் பிரச்சினைகள் இருக்குமாயின் அதுதொடர்பில் சட்டமா அதிபர் ஆலோசனை வழங்குவார் என்றார்.

ஆனால், போதைப்பொருள் விற்பனை செய்வோரிடம் போதியளவில் பணம் இருக்கிறது. தப்பித் தவறியேனும் அவ்வாறானவர்கள், குட்டித்தேர்தலில் குதித்து, வெற்றியீட்டிவிட்டால், நிலைமை இன்னும் மோசமடைந்துவிடும். எதிர்காலமே பாதிக்கப்பட்டுவிடுமென அச்சம் வெளியிட்டார்.

இதற்கிடையில், கூட்டணி அமைத்து களத்தில் இறங்குவது தொடர்பிலான அறிவிப்புகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில், ஓரிரு பிரதேசங்களைத் தவிர, ஏனைய வட்டாரங்களில் சிறுபான்மை பிரதிநிதித்துவம் உறுதியாகிவிட்டது.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய வெளிமாவட்டங்களிலும் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில், அரசியல் கட்சிகளும் ஏனைய சிறுசிறு குழுக்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். இல்லையேல், இருந்ததையும் இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்படும்.

சிறுபான்மை கட்சிகள் பிரிந்து பிரிந்து நின்று, பெரும்பான்மை கட்சிகளுக்கு வாய்ப்பை இலகுபடுத்தி கொடுப்பதை விடவும், ஓரணியில் திரண்டு நின்று, சிறுப்பான்மையின பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் வியூகங்களை வகுக்கவேண்டும்.

குட்டித்தேர்தல் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையால் காலதாமதமாகக் கூடும். என்றாலும், பலமான கூட்டணியை அமைத்து கொள்வதே காலத்தின் தேவையாக இருக்கின்றது என்பதை நினைவில் கொள்க!




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வெகுதூரத்தில் எங்கோ உள்ள நாடுகளை ஆராய்வோர், அவற்றைப் பாராட்டுவார்கள். ஆனால், தாம் வாழும் தாய் நாட்டிலேயே வாழ்பவர்கள், அதன் சரித்திரத்தை, மேன்மையை அறிவதில்லை.

இதனாலேயே நமது இனம் இன்னமும் எமது பழைமையின் வரலாறு தெரியாமல், அடிமை நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. எதையும் பாராட்டலாம்; வெளிநாட்டு வாழ்க்கைத் தரத்தின் வசதிகளைக் கேட்விப்பட்டே, ஆசைப்பட்டு கற்பனையில் மூழ்கலாம்.

எங்கள் நாட்டில் நாங்கள் எப்படி வாழ்கின்றோம் எனப் புரியாது இருக்கின்றோம். அயல் நாடுகளுக்கு ஓடுகின்றோம். இலங்கை, சிங்களப் பெரும்பான்மையினருக்கே சொந்தமானது என்ற எண்ணம் எம்மில் வேரூன்றிவிட்டது. இந்தப் பலவீனமே எமது சுதந்திரம் தளம்பிக் கொண்டிருப்பதற்கான காரணமாகும்.

இலங்கையை சிங்கள மன்னர்கள், தமிழ் மன்னர்கள் மாறிமாறி ஆட்சிசெய்தனர். கால மாற்றத்தால், பெரும்பான்மையினர் தமிழர்களை இரண்டாம் தரத்தில் வைத்துவிட்டார்கள். எமக்கான உரிமைகள் மெல்லமெல்ல அழிந்துவிட்டன. இனம், மதம், மொழி சார்பாக, பலதசாப்தங்களாக எம்மவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இன்னமும் அவல் நிலை மாறவில்லை. எந்த அரசாங்கமும் அதே நிலையிலேயே உள்ளது. நல்ல முடிவு வருமா?

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கான

# பேச்சுவார்த்தைகளும் தமிழர் தரப்பும்



என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

நாளை திங்கட்கிழமை முதல், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் முழு வீச்சில் ஆரம்பமாக இருக்கின்றன. இது ஒரு பொன்னான வாய்ப்பு. இப்படிச் சொல்வதற்கு மிக முக்கியமான காரணம் இருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தானாக முன்வந்து, 2022 நவம்பரில் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது, “இலங்கை தனது 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவிருக்கும் 2023 பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்பதாக, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட வேண்டும்” என்று கூறியதுடன், தமிழர் தரப்பை அதற்கான பேச்சுவார்த்தைக்கும் அழைத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, டிசெம்பர் 2022இல், இது தொடர்பிலான சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றிருந்தது. இதைத் தொடர்ந்து, நாளை முதல் தமிழ்த் தரப்புடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகத் திட்டமிடப்பட்டு உள்ளன.

இந்நிலையில், தமிழ்த் தரப்பின் ஒரு தரப்பான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தாம் முன்வைத்துள்ள மூன்று பூர்வாங்கக் கோரிக்கைகளான, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான வகைகூறல், வடக்கு-கிழக்கில் அரசபடைகள் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவித்தல் ஆகியன நிறைவேற்றப்படாவிட்டால், தாம் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவதா, வேண்டாமா என்பது தொடர்பில், முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்குத் தமிழர் தலைமைகளின் பேச்சுவார்த்தை ஆற்றல் பற்றி சௌமியமூர்த்தி தொண்டமான் சொன்ன கருத்தை பலமுறை பதிந்திருக்கிறேன். காரணம், அதில் உண்மை இருக்கிறது. இலங்கை சுதந்திரம் அடைந்ததும், முதன் முதலாக அரசாங்கத்தின் திட்டமிட்ட அடக்குமுறைக்கு ஆளானவர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்கள்.

இலங்கைக்கு இந்திய வம்சாவளித் தமிழர்கள் வந்த 200ஆவது ஆண்டு இது. சுதந்திர இலங்கைக்கான குடியுரிமைச் சட்டத்தை வரைந்த டி.எஸ் சேனநாயக்க தலைமையிலான அரசாங்கம், இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கவில்லை; அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள்.

இந்திய வம்சாவளி மக்கள், குறிப்பாக மலையகத் தோட்டத் தொழிலாளர் இந்நாட்டில் அனுபவித்த அடக்குமுறைகளும் துன்பங்களும் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால், இந்திய வம்சாவளி மக்களின் தலைமைகள், தமது பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள, முற்றுமுழுதான எதிர்ப்பு நடவடிக்கை என்ற தீவிர நிலைப்பாட்டை எடுக்காமல், விட்டுக்கொடுப்புகளுடனான ஒத்தியைபு அணுகுமுறையைக் கையாண்டார்கள்.

பாடசாலைகள் இல்லாத மலையகத் தோட்டப்புறங்களில் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. வீடுகளற்றிருந்த தோட்டத் தொழிலாளருக்கு வீடுகள் கொஞ்சம் கொஞ்சமாக வழங்கப்பட்டன. பாடசாலைகளின் தரம் மேம்படுத்தப்பட்டது. ஏதோ ஒரு வகையிலேனும், கொஞ்சம் கொஞ்சமாகவேனும், கடந்த ஏழரை தசாப்தங்களில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை முன்னேறியிருக்கிறது.

அடுத்த தலைமுறை தோட்டத்தொழிலுக்குள் சுருங்காது, கல்வி, வணிகம் என மிகவும் முன்னேறியிருக்கிறது. 2003இல், அம்மக்களின் அடிப்படைப் பிரச்சினையாக இருந்த குடியுரிமைப் பிரச்சினையும். அன்றைய ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில், யோகராஜன் தலைமையில் தீர்க்கப்பட்டது.

இந்திய வம்சாவளித் தலைவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் ஒருபுறம் இருந்தாலும், கடந்த ஏழரை தசாப்தத்தில் மலையகம் முன்னேறியிருக்கிறது. அப்படியானால் அவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் தமக்கான அரசியல் அணுகுமுறையை சரியாகக் கையாண்டிருக்கிறார்கள்.

செல்வா, ஜீ.ஜீ, தொண்டா என முத்தலைவர்களைக் கொண்டமைந்த தமிழ் ஐக்கிய முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாக மாறியபோது, ‘இது எமது மக்களுக்கான தேவையோ, பாதையோ இல்லை’ என தொண்டமான் அன்று விலகி, தனி வழி சென்றது, அவர்களைப் பொறுத்தவரையில் சரியான முடிவாகவே இருக்கிறது.

மலையக அரசியலினது அடிப்படையாக, ஏறத்தாழ ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக குடியுரிமைப் பிரச்சினைதான் இருந்தது. ஆனால், அது தீர்க்கப்படும் வரை, நாம் மற்றவற்றைப் பற்றி பேசமாட்டோம் என்றோ, அது தீர்க்கப்படும் வரை தமது மற்றைய அபிவிருத்தித் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான அரசியலைச் செய்யமாட்டோம் என்றோ மலையகத் தலைமைகள் வங்குரோத்து அரசியலை முன்னெடுக்கவில்லை. அவர்கள் தமக்கான அடைவுகளைக் கொஞ்சம்கொஞ்சமாக அடைந்துகொள்ளும் அரசியல் அணுகுமுறையைக் கையாண்டார்கள். இன்றும் அதையேதான் கையாண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதை ஒரு வகையாக, கூடுதல்முறைவாத (incrementalism) அணுகுமுறை எனலாம். ‘கூடுதல்முறைவாதம்’ என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஓர் உத்தியாகும். இது ஒரு முழுமையான தீர்வை, ஒரே நேரத்தில் அடைய முயல்வதை விட, காலப்போக்கில் சிறிய, அதிகரிக்கும் மாற்றங்களைச் செய்வதனூடாக, நீண்டகாலத்தில் தீர்வை அடைந்துகொள்வதை வலியுறுத்துகிறது.

ஒரு பிரச்சினையில், சம்பந்தப்பட்ட தரப்பினர் முரண்பட்ட இலக்குகளைக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளில், அல்லது பிரச்சினை சிக்கலானதாகவும் எளிதில் தீர்க்கப்பட முடியாத சூழ்நிலையிலும் இந்த அணுகுமுறை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. சிறிய, அடையக்கூடிய படிகளில் கவனம் செலுத்துவதன் மூலம், தரப்புகள் அதிகமாக அல்லது குழப்பமடையாமல் ஒரு தீர்மானத்தை நோக்கி முன்னேறலாம். நம்பிக்கையை கட்டியெழுப்பவும் எதிர்கால ஒத்துழைப்புக்கான அடித்தளத்தை நிறுவவும் உதவுகிறது.

எவ்வாறாயினும், தரப்புகள் செயல்முறையைத் தொடர்வதற்கும் தேவையான சமரசங்களைச் செய்வதற்கும் உறுதியளிப்பது முக்கியம். ஏனெனில், அடைவுகளின் அதிகரிப்பின் வேகம் மெதுவாக இருக்கலாம். ஆகவே நீண்டகாலம், பொறுமை, விடாமுயற்சி என்பன இந்த அணுகுமுறைக்கு இன்றியமையாதன.

வடக்கு-கிழக்கு தமிழர் தலைமைகளைப் பொறுத்தவரையில், அவை 2009இற்கு முற்பட்ட அணுகுமுறையிலிருந்து இன்னும் பெரிதும் மாறவில்லை என்பதுதான் திண்ணம். ஓர் ஆயுதம் தாங்கிய இயக்கத்தால் முன்னெடுக்கப்படும் ‘தனிநாட்டு’ விடுதலை அரசியலுக்கும், ஒரு ஜனநாயக அரசியல் கட்சியால் முன்னெடுக்கப்படும் ‘அதிகாரப்பகிர்வு’ கோரும் அரசியலுக்கும், அடிப்படையில் நிறைய வேறுபாடு இருக்கிறது.

ஆகவே, 2009இற்குப் பின்னரான தமிழர் அரசியல், மீளக்கட்டமைப்பு செய்யப்பட வேண்டிய அத்தியாவசியத் தேவை இருக்கிறது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலான அணுகுமுறையும், அடிப்படையிலேயே மாற வேண்டிய நிர்ப்பந்தம், 2009இற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், கிட்டத்தட்ட 14 ஆண்டுகளாகியும், தமிழர் அரசியலில் அந்த மாற்றம் இடம்பெறவில்லை.

இன்னும் தனிநாட்டுக் கனவை, எந்தவித அடிப்படை முகாந்திரமும் இல்லாமல், தமிழ் மக்களிடையே பகட்டாரவாரப் பேச்சாக விதைக்கும் வங்குரோத்து அரசியல், இன்னமும் இங்கு முன்னெடுக்கப்படுகிறது என்பது கவலைக்குரியது.

பூகோள அரசியல் பற்றிய பேசுபவர்கள் கூட, மாறிவரும் உலக ஒழுங்கையும், புதிய உலக ஒழுங்கில் பலவான்களாக மாறிவரும் இந்தியா, சீனா போன்ற நாடுகளையும், பிரிவினை தொடர்பிலான அவர்களது அணுகுமுறைகளை எல்லாம் கருத்தில் கொள்ளாது, வெறும் வாய்ச்சொல் கனவாக ‘தனிநாடு’ பற்றிப் பேசுவதெல்லாம் அடிப்படையில் நேர்மையற்ற செயலாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை, இலங்கைக்குள்தான்; இலங்கை அரசாங்கத்தோடு பேசித்தான் தீர்க்கப்பட முடியும். எந்த இரட்சகனும் பூமிக்கு இறங்கிவந்து, “இந்தா தனிநாடு; இந்தா சமஷ்டியாட்சி” என்று தூக்கித்தந்துவிடப் போவதில்லை. இந்த யதார்த்தத்தை, தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களும் புரிந்து கொள்வது அவசியம்.

இன்று, இலங்கையின் மிகப் பின்தங்கிய மாகாணங்களாக வடக்கும் கிழக்கும் இருக்கின்றன. இது மாற வேண்டுமென்றால், தமிழ் மக்களின் அரசியல் அணுகுமுறை மாற வேண்டும்.

இன்று, இந்நாட்டின் ஜனாதிபதி, இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்றிருப்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். அது தீர்க்கப்பட வேண்டும் என்று பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். 2009இற்குப் பின்னர், “இனப்பிரச்சினையா, அப்படியென்றால் என்ன? நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்” எனச் சப்பைக்கட்டு அரசியல் நடத்திய பேரினவாத ஜனாதிபதிகள்தான் இருந்தார்கள். 2009இற்குப் பின்னர், மைத்திரிபால சிறிசேன உட்பட, எவரும் இனப்பிரச்சினை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை!

தனிப்பட்ட ரீதியிலும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதை ரணில் விரும்புவார். ஏனென்றால் அது மட்டும்தான் அவர் வரலாற்றில் இடம் பிடிப்பதற்குள்ள ஒரே வாய்ப்பு. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு மிகக் கவனமாகவும், இராஜதந்திரமாகவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட நபர்களின் பிரச்சினைகளுக்காக, தமிழரின் அரசியலின் எதிர்காலம் நாசமாக்கப்பட்டுவிடக் கூடாது. கொள்கைத் தெளிவு வேண்டும். அதே போல அதனை அடைந்துகொள்ளும் சாதுரியமும் இராஜதந்திரமும் வேண்டும்.

இல்லையென்றால், இந்தக் கொள்கைகள் எல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருக்கும். இது பத்திரிகையில் அறிக்கை விட்டு, அரசியல் செய்வதற்கான நேரமல்ல. தமிழர் தரப்பு, தமிழ் மக்களுக்கான அடைவுகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நேரம். இல்லாவிட்டால், வாய்ச்சொல் சவடால்களை விட்டுக்கொண்டும், சமூக ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்த பேசிக்கொண்டும், அறிக்கைகள் விட்டுக்கொண்டும், சர்வதேச நாடுகளுக்கு விஜயம் செய்துகொண்டும் தமிழ் அரசியல்வாதிகள் காலத்தை ஓட்ட, வறுமையிலும் துன்பத்திலும், தமிழ் மக்கள் உழன்று சாக வேண்டிய நிலையைத்தான் இந்த வங்குரோத்து அரசியல் தரும்.

## கடிதங்கள்

### நோய் தாக்கத்தால் வேளாண்மை அழிவடையும் அபாயம்

மூதூர், ஒட்டுப்புல் வெட்டை வெளியில் செய்கைபண்ணப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் வேளாண்மை, ஒருவித மஞ்சள் நிற நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெற்பயிர்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டு, பின்னர் கருகிப் போய் வேளாண்மை அழிவடைந்து வருவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

பல தடவைகள் கிருமிநாசினி எண்ணெய் விசிறியும், நோயின் தாக்கம் இல்லாமல் போகவில்லை எனவும் தெரிவிக்கின்றார்கள். முன்னரைவிட தற்போது, கிருமிநாசினி எண்ணெய்களின் விலை அதிகரித்து உள்ளதால் அதிகளவு பணத்தைச் செலவிட்டு கிருமிநாசினி எண்ணெய் விசிறியும் நெற்பயிர்களில் ஏற்பட்டுள்ள மஞ்சள் நிற நோய் குறைவடையவில்லை எனவும் மூதூர் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுவிடயத்தில் உரிய அதிகாரிகள் நேரடியாக வந்து பார்வையிட்டு, இந்நோய் தாக்கத்தை கண்டறிந்து, உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறும் மூதூர், ஒட்டுப்புல் வெட்டை வேளாண்மை வெளி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தீஷான் அஹமட்



‘ரட்ட தினன சிங்கித்தோ’ திட்டத்துக்காக

# ஹற்றன் நஷனல் வங்கி - SLT-MOBITEL கைகோர்ப்பு



SLT-MOBITEL, ஹற்றன் நஷனல் வங்கியுடன் கைகோர்த்து, தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடான “ரட்ட தினன சிங்கித்தோ” (தேசத்தை வெல்லும் சிறார்கள்) எனும் வெளிநாட்டில் பணிபுரிவோரின் சிறுவர்களுக்கு வலுவூட்டும் திட்டத்துக்கு கைகொடுக்க முன்வந்துள்ளது.

பொருளாதார மற்றும் சமூக மட்டங்களில் இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், தேசத்தின் பொருளாதார சிறப்புக்காக பங்களிப்பு வழங்குவதில் வெளிநாடுகளில் பணியாற்றும் பணியாளர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். வெளிநாடுகளில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் இலங்கையிலுள்ள அவர்களின் குடும்பத்தாரின் சேவைகளையும், அர்ப்பணிப்பையும் கௌரவிக்கும் வகையில், ஹற்றன் நஷனல் வங்கி, HNB அசூரன்ஸ் மற்றும் SLT-MOBITEL ஆகிய நிறுவனங்கள் கைகோர்த்து, கல்வி அமைச்சு, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் ஆகியவற்றின் வழிகாட்டலின் கீழ் “ரட்ட தினன சிங்கித்தோ” (தேசத்தை வெல்லும் சிறார்கள்) திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளை ஊக்குவிக்கும் வகையில் தேசிய மட்ட போட்டியாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கும் என்பதுடன், வர்ணம் தீட்டல், நடனம், சங்கீதம் மற்றும் கட்டுரை போன்ற கலை மற்றும் இலக்கிய மட்டங்களில் அவர்களின் திறமைகளுக்கு வெகுமதிகளை வழங்குவதாகவும் அமைந்திருக்கும்.

தேசிய மட்ட செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வர்த்தக நாமம் எனும் வகையில், SLT-MOBITEL இனால் இவ்வாறான திட்டங்களுடன் கைகோர்த்து இலங்கையை அடுத்த கட்ட டிஜிட்டல் முன்னேற்ற நிலைக்கு கொண்டு செல்வதில் தொடர்ச்சியான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக

# செனத் ஜயதிலக நியமனம்

2யூனியன் அஷ்யூரன்ஸ், அதன் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக, செனத் ஜயதிலகவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. 2023 ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. இந்த நியமனத்துக்கு முன்னர், நிறுவனத்தின் பிரதம விநியோக அதிகாரியாக இவர் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2007 ஆம் ஆண்டில் ஜோன் கீல்ஸ் குழுமத்துடன் இணைந்து கொண்டதுடன், 2019 ஆம் ஆண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து கொள்வதற்கு முன்னதாக, ஜோன் கீல்ஸ் லொஜிஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியிருந்தார். ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சிரேஷ்ட உப தலைவராக இவர் திகழ்வதுடன், பதினைந்து வருடங்களுக்கு மேலாக, கூட்டாண்மை முகாமைத்துவ அனுபவத்தை இவர் தம்வசம் கொண்டுள்ளார். நொட்டிங்ஹம் (UK) பல்கலைகழகத்தின் நிதியியல் மற்றும் கணக்கீடு ஆகியவற்றில் முதுமாணிப் பட்டத்தை இவர் கொண்டுள்ளதுடன், முகாமைத்துவ கணக்கீட்டு பட்டையக் கல்வியகத்தின் அங்கத்துவத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுமாணிப் பட்டத்தையும் கொண்டுள்ளார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “செனத் தம் வசம் உறுதியான அனுபவத்தையும், ஆற்றலையும் கொண்டுள்ளதுடன், நிறுவனத்துக்கு பெறுமதியான பங்களிப்பையும் வழங்கக்கூடியவர். புதிய பதவியில் அவர் சிறப்பாக செயலாற்றுவதற்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த தலைமைத்துவ நியமனத்துடன், நிறுவனத்தினால் அதன் வளர்ச்சியை நோக்கி துரிதமாக நகரக்கூடியதாக இருக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டில் மேலும் சிறந்த சாதனைகளை பதிவு செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் கருதுகின்றோம்.” என்றார்.




செனத் ஜயதிலக

புது டெல்லி

# விமானத்தில் பெண் மீது சிறுநீர் கழித்த நபர்

அமெரிக்காவின் நியூயோர்க் விமான நிலையத்தில் இருந்து இந்தியத் தலைநகர் புதுடெல்லியை நோக்கி கடந்த 26 ஆம் திகதி ஏர் இந்தியா விமானமொன்று பயணித்துள்ளது.

இந்நிலையத்தில் சம்பவ தினத்தன்று குறித்த விமானத்தில் பயணித்த நபர் ஒருவர் மது போதையில் சக பயணியான 70 வயது பெண் மீது சிறுநீர் கழித்துள்ளார்.

இந்த விவகாரம் அண்மையில் வெளிச்சத்திற்கு வந்ததை அடுத்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது தொடர்பான விசாரணையில், பெண் மீது சிறுநீர் கழித்த நபர் மும்பையைச் சேர்ந்த 34 வயதான ஷங்கர் மிஸ்ரா எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அடுத்து ஏர் இந்தியா விமானத்தில் அவர் பயணிக்க 30 நாள்கள் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த விவகாரத்தை ஏர் இந்தியா நிறுவன ஊழியர்கள் மிகவும் அலட்சியத்துடன் கையாண்டதால், விசாரணை நடத்த மத்திய விமானப் போக்குவரத்து இயக்குனரகம் உத்தரவிட்டது.



அதேசமயம் கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் தலைமறைவாகி இருந்த ஷங்கா மிஸ்ராவை, புதுடெல்லி தனிப்படை பொலிஸார் கைது செய்து புதுடெல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதனையடுத்து சங்கர் மிஸ்ராவை 14 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

அவர் பணியாற்றி வந்த ‘வெல்ஸ் பார்கோ’ என்ற பன்னாட்டு நிறுவனம் ஷங்கர் மிஸ்ராவை முன்னதாக பணிநீக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தெலுங்கானா

# வழுக்கைக்கு ஓய்வூதியம்

தெலுங்கானா மாநிலத்தில் வழுக்கை தலை உடையவர்களுக்கான சங்கமொன்று இயங்கி வருகின்றது.

இந்நிலையில் இச் சங்கத்தின் தலைவரான பாலையா என்பவர் அண்மையில் அம்மாநில முதலமைச்சர் சந்திரசேகரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

அதில் அவர், “சமூகத்தில் வழுக்கை தலையுடன் இருப்பவர்கள் பல பிரச்சினைகளையும் அவமானத்தையும் எதிர்கொள்கிறார்கள். அதிலும் சிறு வயதிலேயே பலருக்கும் வழுக்கை ஏற்பட்டு விடுகிறது. இதனால் அவர்கள் படும் வேதனை சொல்லி மாளாது.

குறிப்பாக அவர்கள் 4 பேருடன் சேர்ந்து வெளியே செல்ல தயங்குகிறார்கள். வழுக்கை தலையுடன் இருப்பவர்களுக்கு திருமணம் நடப்பதும் கஷ்டமாக உள்ளது. வழுக்கை தலை இருப்பவர்கள் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாகி விடுகிறார்கள்.

ஊனமுற்றவர்கள், கைவிடப்பட்டவர்கள், தீராத வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியம் வழங்குகிறீர்கள்.

அதுபோல் வழுக்கைத் தலை உடையவர்களுக்கும் மாதம் 6,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும். பொங்கல் பண்டிகைக்குள் ஓய்வூதியம் கொடுக்காவிட்டால் பெரிய அளவில் போராட்டம் நடத்துவோம். தலைமைச்செயலகத்தை முற்றுகையிடுவோம்” எனத் தெரிவித்துள்ளார்.



வாரணாசி


# 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் ‘கங்கா விலாஸ்’

ஆற்றில் பயணிக்கக் கூடிய உலகிலேயே மிகவும் நீளமான கப்பல் இந்தியாவில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்படவுள்ளது.

இதனை இந்தியப் பிரதமர் மோடி மெய்நிகர் காட்சி வழியே கொடியசைத்து தொடங்கி வைக்கவுள்ளார்.

இக் கப்பலானது வாரணாசியில் புறப்பட்டு பாட்னா நகரைச் சென்றடைந்து, பின்னர் கொல்கத்தாவுக்கு செல்லும் எனவும், அதன்பின்னர் வங்காளதேசத்திற்குச் சென்று மீண்டும் இந்தியாவின் அசாமின் நகரை வந்தடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 80 பயணிகள் பயணிக்க



கூடிய இக் கப்பலின் மூலம் 50க்கும் மேற்பட்ட சுற்றுலாத்தலங்களை மக்கள் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மயிலாடுதுறை

# வாரிசுக்காக நூதனப் பிரார்த்தனை



முன்னணி நடிகர்களான விஜய் மற்றும் அஜித் ஆகியோரின் திரைப் படங்கள் 8 ஆண்டுகளுக்குப் பின்னர் நேரடியாக மோதுவது ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் இரண்டு பேருக்கும் சரிசமமாகத் திரையரங்குகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இதுகுறித்து இருதரப்பு ரசிகர்களும் பல்வேறு வேண்டுதல்கள் மற்றும் விளம்பரங்களை செய்து வருகின்றனர்.

அந்த வகையில் இயக்குனர் வம்சி இயக்கத்தில் பொங்கலுக்கு வெளிவரவுள்ள விஜயின் வாரிசு திரைப்படம் வெற்றி பெற வேண்டி விஜய் ரசிகர்கள், மயூரநாதர்



கோயிலின் விநாயகர் சன்னதியில் 108 தோப்புக்கரணம் போட்டு விநோத பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

அதேசமயம் கோயில் வளாகத்தில் அனைவருக்கும் அன்னதாமும் வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை

# ஆண்கள் மட்டும்

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே உள்ள அனுப்பப்பட்டி கிராமத்தில் புகழ் பெற்ற கரும்பாறை முத்தையா கோவில் உள்ளது.

இக்கோவிலில் பல ஆண்டுகளாக ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் திருவிழாவொன்று இடம்பெற்று வருகின்றது.

இத்திருவிழாவில் பலியிடப்படும் ஆடுகள் நேர்த்திக்கடனாக விடப்பட்டு, கோவிலிலேயே வளர்க்கப்படுகின்றன. அந்தவகையில் நேற்றைய தினம் இடம்பெற்ற இத் திருவிழாவில் 62 ஆடுகள் பலியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பலியிடப்பட்ட ஆடுகளைவைத்து விருந்து தயார் செய்து அங்கு வரும் பக்தர்களுக்குப் பரிமாறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அசைவ விருந்தை உட்கொண்ட பின்னர் ஆண்கள் இலையை எடுக்காமல் அப்படியே விட்டுச் செல்வதாகவும், இவ் இலைகள் காய்ந்து, அப்பகுதியில் இருந்து கலைந்த பின்னரே, கோவிலுக்கு பெண்கள் வருகை தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





சீனா

# பனிமூட்டத்தால் 19 பேர் உயிரிழப்பு

சீனாவில், பனிமூட்டம் காரணமாக ஏற்பட்ட வீதிவிபத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந்ததோடு, 22 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜியாங்சி மாகாணத்தில் உள்ள நஞ்சாங் பகுதியில் நேற்றைய தினம்( 08) நள்ளிரவு 1 மணியளவில் இவ் விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நஞ்சாங் பகுதியில் மூடுபனி நிலவுவதால், வாகன ஓட்டிகள் வேகத்தை குறைத்து, கவனமாக ஓட்டவும், வாகனங்களை முந்திச் செல்ல வேண்டாமென்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த மாதம் ஷெங்ஷூ நகரில் பனிமூட்டத்தால் 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் மோதிக்கொண்டதில் ஒருவர் உயிரிழந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

## ஆசிரியை மீது சிறுவன் துப்பாக்கிப் பிரயோகம்

அமெரிக்காவின் விர்ஜினியா மாநிலத்திலுள்ள, ஆரம்பப் பாடசாலையொன்றில கடந்த 6 ஆம் திகதி, முதலாம் தரத்தில் படித்து வரும் சிறுவனொருவன் தனது ஆசிரியையைத் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று ஆசிரியையுடன் குறித்த சிறுவன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்ததாகவும், இதன்போது திடீரென ஆடையில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து ஆசிரியை நோக்கி அச்சிறுவன் சுட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த ஆசிரியை கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் நடத்திய விசாரணையில் குறித்த சிறுவன் தெரிந்தே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டவசமாக வகுப்பறையிலிருந்த ஏனைய மாணவர்களுக்கு இதில் காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட ஆபிரிக்கா

## அகதிகள் ஐவர் உயிரிழப்பு; 10 பேர் மாயம்



வட ஆபிரிக்க நாடான துனீசியாவில் அகதிகளை ஏற்றிச் சென்ற படகொன்று கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்.

உள்நாட்டு போர் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் கடல் மார்க்கமாக படகுகளில் பயணம் செய்து ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

அந்தவகையில் அண்மையில் , மத்திய தரைக்கடலைக் கடந்து இத்தாலிக்கு செல்ல முயன்ற குறித்த படகானது பாரம் தாங்காமல் நீரில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் படகில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கினர். தகவலறிந்து வந்த கடலோர காவல் படையினர், நீரில் தத்தளித்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 20 பேரை பத்திரமாக மீட்டனர். மேலும், மாயமான 10 பேரைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஈரான்

## ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம்; இருவருக்கு மரண தண்டனை

ஈரானில் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டதின்போது, துணை இராணுவப் படை வீரர் கொல்லப்பட்ட வழக்கில் 2 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

`ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை` எனக் கூறி கைது செய்யப்பட்ட 'மஹ்சா அமினி' என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.


இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், ஈரான் அரசுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப்போராட்டங்களின் போது துணை இராணுவ வீரர் ருஹோல்லா அஜாமியன் போராட்டக்காரர்களால் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் முக்கிய குற்றவாளிகளான முகமது மஹ்தி கராமி மற்றும் செய்யத் முகமது ஹொசைனி ஆகியோர் தூக்கிலிடப்பட்டதாக நீதித்துறை செய்தி ஏஜென்சி உறுதி செய்துள்ளது மேலும், ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 11 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## காணொளியை வெளியிட்டது நாசா



தொடர்ந்து 133 நாட்களாக சூரியனைப் படம் பிடித்த புகைப்படத்தை நாசா வெளியிட்டுள்ளது.

சூரியனின் இயக்கம் குறித்த நாசா கடந்த 2010ம் ஆண்டு முதல் படம் பிடித்து வருகின்றது.

இந்நிலையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 12 முதல் டிசம்பர் 22 வரை தொடர்ந்து 133 நாட்கள் சூரியனை படம் பிடித்த காணொளி வெளியாகி உள்ளது.

இதன் மூலம் சூரியன் மட்டும் இன்றி பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரங்கள் செயல்பாடுகள் குறித்தும் தெளிவான ஆய்வு மேற்கொள்ள முடியும் என நாசா தெரிவித்துள்ளது.

27 நாட்களுக்கு ஒருமுறை சுழலும் சூரியனின் சுழற்சி டைம்லாப்ஸ் முறையில் வெளியிடப்பட்டுள்ளது.



இலங்கைக்கு எதிரான கடைசி டி-20 போட்டியில்

# இந்தியா அபார வெற்றி

இலங்கை அணிக்கு எதிரான 3 ஆவதும் கடைசியுமான டி20 போட்டியில் இந்திய அணி 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பெற்றுக்கொண்டது.

229 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய இலங்கை அணிக்கு கடந்த முறை சிறப்பான ஆரம்பத்தை கொடுத்த நிசாங்கா மற்றும் குஷல் மெண்டிஸ் இணை இம்முறை விரைவாகவே ஆட்டமிழந்தது.

பவர் பிளே வரை தாக்குப்பிடித்த இந்தக் கூட்டணியை அக்சர் படேல் பிரித்தார். முதல் விக்கெட்டாக குஷல் மெண்டிஸ் 23 ஓட்டங்களுக்கு வெளியேற, அடுத்த மூன்று பந்துகளில் நிசாங்காவை 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க செய்தார் அர்ஷ்தீப் சிங். அடுத்த ஓவரை வீசிய கேப்டன் பாண்டியா பெர்னாண்டோவை 1 ஓட்டத்துக்கு நடையைக் கட்ட வைத்தார்.

சிறிது நிலைத்து ஆடிய அசலங்கா மற்றும் தனஞ்செயாவை முறையே 19 மற்றும் 22 ஓட்டங்களுக்கு சஹால் அவுட் ஆக்க ஆட்டம் கொஞ்சம் கொஞ்சமாக இந்திய அணி வசம் வந்தது.

இதன்பின் வந்தவர்களில் இலங்கை அணித்தலைவர் தசுன் ஷனகாவை தவிர மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஷனகா 23 ஓட்டங்கள் எடுத்தபோது அர்ஷ்தீப் சிங் அவரை வீழ்த்த, அதே ஓவரில் கடைசி விக்கெட்டாக மதுஷங்காவையும் ஆட்டமிழக்க செய்து இந்திய அணியை வெற்றிபெற வைத்தார்.

16.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 137 ஓட்டங்கள் மட்டுமே இலங்கை அணி எடுத்தது. இதன்மூலம் இந்திய அணி 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றதுடன் தொடரையும் 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்திய அணி தரப்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ஹர்திக் பாண்ட்யா முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணிக்கு இஷான் கிஷன் - சுப்மன் கில் இணை தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர். இதில் முதல் ஓவரிலேயே இஷான் கிஷன் 1 ஓட்டத்துடன் அவுட்டாகி வெளியேற, அடுத்து வந்த ராகுல் திரிபாதி சுப்மன் கில்லுடன் கைகோர்த்தார். இருவரும் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்த, 6 ஆவது ஓவரில் ராகுல் திரிபாதி 35 ஓட்டங்களுடன் நடையைக்கட்டினார்.

அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் இலங்கை பந்துவீச்சை நாலாப்புறமும் சிதறடிக்க, மறுபுறம் சுப்மன் கில் 46 ஓட்டங்களுடன் களத்திலிருந்து வெளியேறினார். அடுத்து வந்த ஹர்திக் பாண்ட்யா, தீபக் ஹூடா இருவரும் சொல்லி வைத்தார் போல தலா 4 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினர்.

நிலைத்து நின்று ஆடிய சூர்யகுமார் யாதவின் அதிரடியால் இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 228 ஓட்டங்களை சேர்த்தது. சூர்யகுமார் யாதவ் 51 பந்துகளில் 112 ஓட்டங்களுடனும், அக்சர் படேல் 9 பந்துகளில் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இலங்கை அணி தரப்பில் தில்சான் மதுஷங்கா 2 விக்கெட்டுகளையும், காசுன் ரஜிதா, வஹிந்டு ஹசரங்கா, சாமிக்க கருணாரத்ன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

## சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் வெற்றி



அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டு கழகத்துக்கும் சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான போட்டி அண்மையில் இடம்பெற்றிருந்தது.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியில் 2 - 0 என்ற கோல்கள் அடிப்படையில் சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில் நசீத் மற்றும் ஜனுஸ்கான் ஆகியோர் தலா ஒரு கோலை புகுத்தியிருந்தனர்.

## வெற்றிகரமாக முடிந்த பூப்பந்து போட்டிகள்

எஸ்.கே. குமார்

நுவரெலியா மாவட்ட பூப்பந்து சங்கத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட பூப்பந்து சங்கத்தின் தலைவர் கிண்ணத்துக்கான 2022 ஆம் ஆண்டுக்கான சாம்பியன்ஷிப் பூப்பந்தாட்ட போட்டிகள், நுவரெலியா மாநகரசபை விளையாட்டு உள்ளக அரங்கில் பெருந்திரளான வீரர்களின் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக நடைப்பெற்றன.

அப்போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் வியாழக்கிழமை (04) நடைபெற்றது. மிக நீண்ட காலத்திற்குப் பிறகுதான் இந்த போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு பங்களித்த வீரர்கள், அதிகாரிகள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் நுவரெலியா மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் மத்திய மாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் தற்போதைய உறுப்பினருமான மஹிந்த தொடம்பேகமகே நன்றி தெரிவித்தார்.






## டென்னிஸ் நட்சத்திரம் சானியா அதிரடி முடிவு

எதிர்வரும் பெப்ரவரி மாதம் டுபாயில் நடைபெற உள்ள துபாய் டூட்டி ஃப்ரீ டென்னிஸ் சாம்பியன்ஷிப் தொடருடன் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற இந்தியாவின் டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா முடிவு செய்துள்ளார். ஓய்வு முடிவை மகளிர் டென்னிஸ் கூட்டமைப்பிடம் சானியா தெரிவித்துள்ளார்.

36 வயதான சானியா மிர்சா கடந்த ஆண்டு இறுதியுடன் சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற திட்டமிட்டிருந்தார். ஆனால், முழங்கை காயம் காரணமாக சானியா மிர்சா, அமெரிக்க ஓபன் தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. முன்னதாக அவர்,ஓகஸ்ட் மாதம் முதலே எந்தவித போட்டிகளிலும் பங்கேற்காமல் இருந்து வந்தார். கடந்த 10 ஆண்டுகளாக டுபாயில் வசித்துவரும் சானியா மிர்சா, அங்கேயே தனதுபோட்டியை விளையாட முடிவு செய்துள்ளார்.

இதுதொடர்பாக சானியா மிர்சா கூறும்போது, “கடந்த ஆண்டு இறுதியில் டிபிள்யூடிஏ பைனல்ஸ் தொடருடன் ஓய்வு பெற முடிவு செய்திருந்தேன். ஆனால், அமெரிக்க ஓபன் தொடருக்கு முன்னதாகவே எனது முழங்கையில் காயம் ஏற்பட்டது. இதனால் நான் அனைத்திலும் பின்வாங்க நேரிட்டது.

எனது சொந்த முடிவுகளின்படியே விஷயங்களை செய்ய விரும்புகிறேன். காயத்தால் கட்டாயப்படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை. அதனால், தொடர்ந்து பயிற்சிகள் மேற்கொள்கிறேன். பெப்ரவரி மாதம் டுபாயில் நடைபெற உள்ள துபாய் டூட்டி ஃப்ரீ டென்னிஸ் சாம்பியன்ஷிப் தொடருடன் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதே திட்டமாக உள்ளது'' என்றார்.

கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் இரட்டையர் பிரிவில் 3 முறையும், கலப்பு இரட்டையர் பிரிவில் 3 முறையும் சானியா மிர்சா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

ஆயிரம் புள்ளிகள் கொண்ட துபாய் டூட்டி ஃப்ரீ டென்னிஸ் சாம்பியன்ஷிப் தொடர் வரும் பெப்ரவரி 19 ஆம் திகதி தொடங்குகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 09 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.